RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22s839

# மெய்யுணர்தலில் வள்ளுவரின் சார்புக் கொள்கை

**க. பிரீதா** [அ, *]

[அ] தமிழ்த்துறை, செவாலியர் டி. தாமஸ் எலிசபெத் மகளிர் கல்லூரி, சென்னைப் பல்கலைக்கழகம், பெரம்பூர், சென்னை-600 011, தமிழ்நாடு, இந்தியா

# Valluvar's Dependency Principle in Consciousness

**K. Preetha** [a, *]

[a] Department of Tamil, Chevalier T. Thomas Elizabeth College for Womens, University of Madras, Perambur, Chennai – 600011, Tamil Nadu, India

* Corresponding Author: preethailamaran@gmail.com

Received: 05-04-2021
Revised: 25-04-2022
Accepted: 11-05-2022
Published: 21-07-2022

Check for updates

**ABSTRACT**

In Arathuppaal, Valluvar creates a state of asceticism (by charity) and lays down the true principles. In the 36th chapter of Meiyunarthal' (Realization), he gives a very beautiful description of the realisation of the real object of God. This article examines only the single verse 359 in this authority. In this verse, the word 'Charbu' (dependency) occurs in two places. The word 'Charbu' that comes first denotes God. It also says to feel sfor him. The word 'Charbu' that comes second refers to the misfortunes that man earns. Valluvar says that if one wants to get rid of them, one should practise Ashtaanga Yoga (eight limbs of yoga). Valluvar says that if we practise in this way, all the vices that are waiting to torment us will be destroyed and the state of salvation will be attained. This article explains this message by quoting the sayings of sages, including Thirumoolar. This article emphasises that the purpose of human birth is to overcome birth. Through this, the virtue of wisdom to merge with God is realized. Recovering from the current selfish life, our soul becomes a loving soul and attains the maturity to respect the welfare of others. Love shown to other living beings becomes grace and honours human dignity.

**Keywords:** Valluvar, Charbu, Dependency, Meiyunarthal,

## முன்னுரை

திருக்குறள், உலகத்தில் வாழும் மக்கள் சமுதாயம் முழுமைக்குமான அறக் கோட்பாடுகளை வரையறுத்து தந்திருக்கின்றது. இக்காரணம் பற்றியே உலகப் பொதுமறை எனச் சான்றோர்களால் போற்றப்படுகின்றது. தனிமனித வாழ்க்கையை இரு கூறாகப் பகுத்துக் கொண்ட வள்ளுவர் இல்லறம் துறவறம் என்னும் இரு இயல்களில் அவ்வாழ்க்கையை ஆராய்கின்றார். இல்லறத்தில் வாழ் வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்தோடு ஒப்ப வைத்து வணங்கப்படுவான் என வள்ளுவர் பேசுகின்றார். துறவறத்தை மேற்கொள்பவன் அந்நெறிப்படி ஒழுகினால் பிறப்பறுத்து வீடு பெறுவான் எனக் கூறுகின்றார்.

'அருளுடைமை" அதிகாரத்தில் தொடங்கும் துறவறவியல் 'அவாஅறுத்தல்" அதிகாரத்தோடு நிறைவு பெறுகின்றது. இல்லறத்திற்கு அன்பு அவசியமாவதைப் போலத் துறவறத்திற்குஅருள் இன்றியமையாது வேண்டப்படுகின்றது. தொடர்புடையவர்களிடத்தில் செல்லுவதுஅன்பு. தொடர்பில்லாத எல்லா உயிர்களிடத்தும் செல்லுவது அருளாகும். அதனால் தான் துறவறத்தின் தொடக்கப் புள்ளியாக அருளை வைத்திருக்கிறார் வள்ளுவர். அருளை அடிப்படையாகக் கொண்டு எழும்பும் துறவறக்

கோயிலின் கருவறையில் பரம்பொருளை உணரும் 'மெய்யுணர்தல்" எனும்அதிகாரம் தெய்வத் திருச்சிலையாய் விளங்குகின்றது.

மெய்யுணர்தல் அதிகாரத்திற்கு விளக்கம் தரவந்த பரிமேலழகர்,' அஃதாவது பிறப்பு வீடுகளையும் அவற்றின் காரணங்களையும், விபரீத ஐயங்களான் அன்றி உண்மையான 'உணர்தல்" (Parimelalhagar, 2016).

எனக் கூறுகின்றார். பிறப்பும் இறப்பும் மாறி மாறி வருவதற்கான காரணங்களை மயக்கம் தரும் சந்தேகங்களை எழுப்பித் தவறான முடிவுக்கு வராமல் உண்மையாகவே அறிந்து கொள்ளுதல் மெய்யுணர்தல் ஆகும் என்பது பரிமேலழகரின் விளக்கம். மற்றொருவகையில் கூறப் போனால் மெய்ஞானம் அடைவதே மெய்யுணர்தல்ஆகும். இவ்வதிகாரத்தில் வரும்,

“சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றழித்துச்

சார்தரா சார்தரு நோய்”

என்னும் குறட்பாவை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும் (Manikkavasagan, 2018).

## சார்புஉணர்தல்

வள்ளுவரின் மேற்கண்ட குறட்பாவுக்குப் பரிமேலழகர், 'ஒருவன் எல்லாப் பொருட்கும் சார்பாய அச்செம்பொருளை உணர்ந்து இருவகைப் பற்றும் அற ஒழுகவல்லானாயின் அவனை முன் சாரக் கடவனவாய் நின்ற துன்பங்கள் அவ்வுணர்வு ஒழுக்கங்களை அழித்துப் பின் சாரமாட்டா" எனப் பொருள் வரைகின்றார். இக்குறட்பாவில், 'சார்பு"என்னும் சொல் இருமுறைவந்துள்ளது. முதலில் உள்ளசார்புஎனும் சொல் எல்லாம் வல்ல இறைவனைக் குறிக்கின்றது (Parimelalhagar, 2016). இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்து என்றும் உள்ள ஆன்மாக்கள் ஈடேறும் பொருட்டு அவற்றுக்கு உடம்புகளையும் கருவி கரணங்களையும் கொடுத்து, அந்த ஆன்மாக்கள் துய்ப்பதற்கான போகங்களையும் வழங்கி உயிர்க்கு உயிராக உடனிருந்து இயக்குவதால் இறைவனைச் 'சார்பு" என்று வள்ளுவர் குறிக்கின்றார். இக்காரணம் பற்றியே பரிமேலழகர் 'எல்லாப் பொருட்கும் சார்பாயசெம்பொருள்" இறைவன் என விளக்கம் தருகின்றார் (Parimelalhagar, 2016).

மனிதராய்ப் பிறந்த ஒவ்வொரு வரும் இத்தகைய பேரருட் கருணை வாய்ந்த இறைவனை உணர்ந்து கொள்வது ஈடேறுவதற்கான சிறந்த வழியாகும். எல்லா ஆன்மாக்களும் நல்லகதி காண்பதற்கான முனைப்பில் உள்ளன. ஆணவ மறைப்பின் காரணமாக வினை வயப்பட்டு உலகப் பற்றுக்களில் ஆழ்ந்து கிடக்கின்றன. அதனால் தான் வள்ளுவர் சார்பை உணர வேண்டும்எனக் கூறுகின்றார். சார்பாகிய இறைவன் ஒருவன் இருக்கின்றான் என்னும் அறிவு மனிதர் பலருக்கும் உள்ளது. அதனால் தான் இவ்வுலகில் இறைவழிபாடுநிகழ்கின்றது. ஆனால் இறைவனை உணர்தலென்பது மெய் ஞானத்தால் நிகழ்வது. இத்தகைய மெய்ஞானம் அடைந்தவர்கள் இவ்வுலகில் வாழும் எல்லாரிடத்திலும் எல்லாஉயிர்களிடத்திலும் எல்லாப் பொருட்களிலும் இறைவனைக் காண்பார்கள்.

தாயுமானவர் இறைவனுக்குப் பூசனை செய்ய மலர் பறிக்கச் செல்லுகிறார். அந்த மலரிலும் இறைவன் இருப்பதைக் காணுகின்றார். ஆகவே, மலரைப் பறிக்க மனம் வராமல் திரும்பி விடுகின்றார்.

'பண்ணேன் உனக்கானப+சைஒருவடிவிலே

பாவித்து இறைஞ்ச ஆங்கே

பார்க்கின்ற மலரூடு நீயே இருத்திஅப்

பனிமலர் எடுக்க மனமும்

நண்ணேன்

என்பது தாயுமானவர் வாக்கு. இந்த மெய்ஞான உணர்வைத் தான் வள்ளுவர் சார்பு உணர்தல் எனப் பேசுகின்றார் (Thayumanavar, 2014).

## சார்பு கெடல்

சார்பை உணர்வதென்பது எளிதில் நிகழக் கூடியதன்று. உலகில் பிறவி எடுக்கின்ற ஆன்மாக்கள் நன்மை தீமைகளைப் புரிந்து புண்ணிய பாவங்களைச் சேர்க்கின்றன. இப்புண்ணிய பாவங்கள் நல்வினை தீவினை என அழைக்கப்படுகின்றன. இந்த நல்வினை தீவினை காரணமாக அடுத்தடுத்த பிறவிகள் உண்டாகின்றன. இந்த இரு வினைகளும் பிறவிக்குவித்தாய் அமைவதால் 'இருள்சேர் இருவினை"- என வள்ளுவர் பெருமான் கூறுகின்றார் (Manikkavasagan, 2018). இந்த வினைகள் காரணமாகப் பிறவியெடுப்பவர்கள் உலகப் பற்றுக்களில் அழுந்தி இன்ப துன்பங்களை அனுபவிக்கிறார்கள். இவ்வினைகளைத் தான் 'சார்பு" எனும் இரண்டாம் சொல்லாகக் குறிக்கும் வள்ளுவர் ஆன்மாக்களை வாட்டி வதைக்கும் இச்சார்புகெடவேண்டும் எனவிரும்புகிறார். பல பிறவிகளாக உலகப் பற்றுக்களில் ஆழ்ந்து கிடக்கும் ஆன்மாக்கள் அவற்றை விட்டு விடுதலை பெறுவதென்பது மிகமிக அரிய செயலாகும். நாம் எவ்வளவு தான் முயற்சிசெய்தாலும் ஆசையானது மீண்டும் மீண்டும் நம்மைப் பற்றுகளில் அழுத்திக் கொண்டேயிருக்கும். பற்றை விடுவதற்கு ஒரே வழி இறைவனைப் பற்றிக் கொள்வது தான். ஏனென் றால் இறைவன் பற்றற்றவன். பற்றற்ற இறைவனைச் சாரும்போது நம் பற்றுக்களும் தீர்ந்துபோகும்.

'பற்றுக பற்றற்றான் பற்றினைஅப்பற்றைப்

பற்றுக பற்று விடற்கு" எனக் குறளாசான் கூறுவது இங்கு நோக்கத்தக்கது (Manikkavasagan, 2018).

## ஒழுகுதல்

பற்றுக்கள் அற்றுப் போகுமானால் நல்வினை தீவினையாகிய இருவினைகளையும் ஒப்ப நோக்குகின்ற ஆன்மப் பக்குவம் உண்டாகிவிடும். இந்நிலையை 'இருவினைஒப்பு" எனச் சைவசிந்தாந்தம் குறிப்பிடுகின்றது. இருவினை ஒப்பு ஏற்பட்டால் இறைவனின் திருவருட்பெருக்கு பக்குவப்பட்ட ஆன்மாவின் மீதுபொழியும். அச்சூழ்நிலையில் வினைகள் பொசுங்கிப் போய் முக்திப் பேறுஉண்டாகும். இந்த முக்தி நிலையை வள்ளுவப் பெருந்தகை, 'மற்றுஈண்டுவாராநெறி எனவும் 'பேரா இயற்கை"- எனவும் கூறுகின்றார் (Manikkavasagan, 2018).

பற்றுக்கள் நீங்கவும் வினைகள் அற்றுப் போகவும் என்ன வழி முறையைக் கடைப்பிடிப்பது என வள்ளுவரிடம் கேட்போமேயானால், 'ஒழுக வேண்டும்" என அவர் விடை கூறுகின்றார். 'சார்புணர்ந்து சார்பு கெட ஒழுகின்" என்னும் தொடரிலுள்ள ஒழுகின் என்னும் சொல் நம் சிந்தனையைத் தூண்டுகின்றது. எவ்வாறெல்லாம் ஒழுகுகின்றது என்னும் வினா எழுகின்றது. இதற்குத் தகுந்த விடையைப் பரிமேலழகர் உரைக்கின்றார். 'ஈண்டுஒழுக்கம் என்றது யோகநெறி ஒழுகுதலை, அஃது இயமம், நியமம், இருப்பு, உயிர்நிலை, மனவொழுக்கம், தாரணை, தியானம், சமாதி என எண் வகைப்படும்" என்று பரிமேலழகர் விளக்கம் தருகின்றார் (Parimelalhagar, 2016).

ஆன்மத் தூய்மை பெறுவதற்கு எண் வகை யோகம் அல்லது அஷ்டாங்கயோகம் இன்றியமையாது வேண்டப்படுகின்றது. இப்பயிற்சியில் இடையறாது ஈடுபடுபவர்கள் ஞானம் பெற்றுப் பிறப்பென்னும் பேதைமைநீங்குவார்கள். அதனால் தான் வள்ளுவர் "ஒழுகின்" என்னும் சொல்லை இடுகின்றார். இனி எண் வகை யோகத்தைப் பற்றித் தெளிவாகத் தெரிந்து கொள்ளுதல் அவசியமாகும்.

## எண் வகை யோகம்

எண் வகை யோகம் எனப்படும் அஷ்டாங்கயோகம் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே நம் தமிழகத்தில் யோகியர்களால் கடைப்பிடிக்கப்பட்டு வந்திருக்கின்றது. ஒல்காப் பெரும் புகழ்

தொல்காப்பியர், 'நாலிருவழக்கில் தாபதபக்கமும்" என்றும் இளங்கோவடிகள் 'அறத்துறைவிளங்கிய அறவோர் பள்ளியும்" என்றும் எண் வகை யோகத்தைச் சுட்டுகின்றனர் (Sundaramoorthy, 1986; Sri Chandran, 2009). இவ்வடிகளில் வரும் 'நாலிருவழக்கு", 'அறத்துறை" என்னும் சொற்கள் எண்வகையோகத்தைக் குறிப்பனவாகும்.

தொல்காப்பியத்திற்கு உரைகண்ட நச்சினார்க்கினியரும் சிலம்பிற்கு உரை செய்த அடியார்க்கு நல்லாரும் இந்த எண் வகை யோகத்திற்கு ஒரே விதமான மேற்கோள் செய்யுள்களைக் காட்டி விளக்கம் தந்திருக்கின்றனர். அம்மேற்கோள் செய்யுள்கள் பின்வருமாறு:

அ) இயமம்

பொய் கொலை களவே களவே காமம் பொருள்நசை

இவ்வகை ஐந்தும் அடக்கியது இயமம்.

இயமம் என்பது அஷ்டாங்கயோகம் புரிவார் விலக்க வேண்டிய தீயகுணங்களை உரைப்பதாகும். இயமம் என்னும் வடசொல்லுக்கு நீக்குதல் என்று பொருள். பொய், கொலை, திருட்டு, காம இச்சை, பொருளாசை ஆகிய ஐந்தையும் நீக்குவது இயமம் ஆகும்.

ஆ) நியமம்:

பெற்றதற்கு உவத்தல் பிழம்பு நனிவெறுத்தல்

கற்பன கற்றல் கழிகடும் தூய்மை

பூசனைப் பெரும்பயம் ஆசாற்குஅளித்தலொடு

நயனுடை மரபின் நியமம் ஐந்தே.

சான்றோர்கள் இவற்றைக் கைக்கொள்ள வேண்டுமென நியமித்தபடி ஒழுகுதல் நியமம் ஆகும். பெற்ற பொருளைக் கொண்டு மகிழ்ந்து மனநிறைவு அடைதல், தீவளர்த்துவேள்விபுரிதல், கற்கத் தகுந்த ஞான நூல்களைக் கற்றல், மிகுந்த தூய்மையுடன் இருத்தல், பூசைசெய்தல், குருவுக்குப் பெரும் பொருளை அளித்தல் ஆகிய இவ்வைந்தும் விரும்பத்தக்க மரபினை உடைய நியமம் ஆகும்.

இ) ஆசனம் அல்லது இருக்கை

நிற்றல் இருத்தல் கிடத்தல் நடத்தல் என்று

ஒத்தநான்கின் ஒல்காநிலைமையோடு

இன்பம்பயக்கும் சமயம் முதலிய

அந்தமில் சிறப்பின் ஆசனம் ஆகும்.

யோகம் புரிவதற்கு உடலினை ஆசன நிலைகளில் வைத்துப் பழகுதல் அவசியமாகும். ஆகவே, எண்வகை யோகத்தில் ஆசனம் அல்லது இருக்கை ஓர் உறுப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளது. இதனைப் பரிமேலழகர் இருப்புஎனக் குறிக்கின்றார்.

நின்ற நிலையில், அமர்ந்த நிலையில், படுத்த நிலையில், நடந்த நிலையில் ஆசனங்கள் நான்குவ கையாகச் செய்யப்படும். அந்த நான்கோடு இன்பம் பயக்கும் சமயமாகிய சாந்திஆசனம் முதலியவை குற்றமில்லாத சிறப்பையுடைய ஆசனங்களாகும்.

ஈ) பிராணா யாமம் அல்லது வளிநிலை:

'உந்தியொடுபுணர்ந்த இருவகைவளியுந்

தம்தம் இயக்கம் தடுப்பதுவளிநிலை"

நம்மை அறியாமல் சுவாசமானது இயல்பாக நடைபெற்றுக் கொண்டேயிருக்கின்றது. காற்று மூக்கின் வழியாக உள்ளே சென்று மீண்டும் வெளிவருவது வரை ஒருசுவாசம் எனக்

கணக்கிடப்படுகின்றது. ஒரு நிமிடத் திற்கு15 சுவாசங்கள் நிகழ்கின்றன. ஒரு மணிநேரத் திற்கு 900 சுவாசங் கள் வீதம் 21,600 சுவாசங்கள் நிகழ் கின்றன. இந்தச் சுவாசத்தைத் தடுத்து உடம்புக்குள்ளாகவே இயங்கச் செய்வதுதான் பிராணாயாமம் அல்லது வளிநிலை என்பது. பிராணன்+அயாமம் ஸ்ரீ பிராணாயாமம் அயாமம் என்றால் சுவாசத் தைத் தடுப்பது என்று பொருள்.

வலது மூக்கின் வழியாகச் சுவாசம் நடந்தால் அது சூரிய கலைஎனப்படும். இடது மூக்கின் வழியாகச் சுவாசம் நடந்தால் அது சந்திரகலை எனப்படும். இச்சுவாசங்கள் உந்தித்தளம் எனப்படும் கொப்பூழ் வரை சென்று பொருந்தி வருகின்றது. இதைத்தான் மேற்கண்ட செய்யுள் 'உந்தியொடு புணர்ந்த இருவகை வளி" எனக் கூறுகின்றது. இந்த இருவகை சுவாசத்தின் இயக்கத்தையும் தடுத்துச் சுழிமுனைநாடிவழியாக உள் இயங்கச் செய்வது வளிநிலைஆகும். இந்த வளிநிலை (அ) பிராணாயாமத்திற்குப் பரிமேலழகர், 'உயிர்நிலை" எனப் பெயர்தந்துள்ளார்.

உ) பிரத்தியாகாரம் (அ) தொகைநிலை:

'பொறியுணர்வுஎல்லாம் புலத்தின் வழாமல்

ஒருவழிப்படுப்பதுதொகைநிலையாமே"

மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளின் உணர்வுகள் தொடுஉணர்ச்சி, சுவை, பார்வை, வாசனை, கேள்வி ஆகிய ஐம்புலன்களின் வழியாகச் செல்லுகின்றன. இப்பொறி உணர்வுகளைப் புலன்களின் வழியாகச் செல்லவிடாமல் ஒருநிலைப்படுத்துவது பிரத்தியாகாரம் அல்லது தொகைநிலை எனப்படும். இதைத் திருமூலர்,

'பார்ப்பான் அகத்திலேபாற்பசுஐந்துண்டு

மேய்ப்பாரும் இன்றிவெறித்துத் திரிவன

மேய்ப்பாரும் உண்டாய் வெறியும் அடங்கினால்

பார்ப்பான் பசுஐந்தும் பாலாய்ச் சொரியுமே"

எனத் திருமந்திரப்பாடலில் இசைக்கின்றார் (Manikkavasagan, 2018). யோகநிலையில் உள்முகமாகப் பார்ப்பவனைப், 'பார்ப்பான்"என்றும் ஐம்பொறிகளைபால் பசுக்கள் என்றும் அப்பசுக்களுக்கு மேய்ப்பவர் உண்டாகி வெறியும் அடங்கினால் பாலாய்ச்சொரியும் என்றும் திருமூலர்பேசுகின்றார். இப்புலனடக்கம் தான் தொகைநிலைஎனப்படுகிறது.

ஊ) தாரணைஅல்லதுபொறைநிலை

'மனத்தினைஒருவழிநிறுப்பதுபொறைநிலை"

ஐம்புலன்களும் ஒருவழிப்பட்ட பிறகு மனமானது எண்ணங்களை உற்பத்தி செய்யாமல் ஒடுங்கி நிற்கும். இந்த அமைதிப்பட்ட நிலைக்குப் பெயர் பொறைநிலை அல்லது தாரணை ஆகும்.

எ) தியானம் அல்லது நினைவு

'நிறுத்தியஅம்மனநிலைதிரியாமல்

குறித்தபொருளொடுகொளுத்தல் நினைவே"

ஒருவழிப்பட்ட மனமானது அந்நிலையிலிருந்து மாறாமல் ஏதேனும் ஒருமந்திரத்தை இடையறாது சிந்தித்துக் கொண்டிருப்பது தியானம் அல்லது நினைவு எனப்படும். சைவர் 'சிவாய நம" என மனத்தில் தியானிப்பது போல அவரவர் பக்குவநிலைக்கு ஏற்ப மந்திரங்களைத் தியானித்துக் கொள்ளலாம். அவ்வாறு தூய சிந்தனையுடன் தியானிக்கும் போது யோகஆற்றல் பெருகிக் கொண்டேயிருக்கும்.

ஏ) சமாதி

“ஆங்கனம் குறித்தஆய்முதல் பொருளொடு

தான்பிறன் ஆகாத் தகையதுசமாதி"-

தியானத்திற்கு அடுத்த முற்றிய இறுதி நிலை சமாதியாகும் (Sundaramoorthy, 1986). சிந்தித்த மந்திரத்தையும் விடுத்து முதல் பொருளாகிய பரம்பொருள் வேறு, தான் வேறு, என்னும் நிலைமாறி ஆதியுடன் சமப்பட்டு நிற்பது சமாதியாகும்.

இந்த எட்டாவது நிலையை எய்துவதற்காகத் தான் இயமம் முதலாக தியானம் வரையுள்ள ஏழு படிநிலைகளும் அமைக்கப்பட்டுள்ளன. நம் முன்னோர்கள் ஆன்மிகம், யோகஞானம் தொடர்பான அனுபவங்களில் ஈடுபட்டுஅவற்றின் உண்மைத் தரவுகளைச் செய்யுள் வடிவில் செய்து வைத்துள்ளனர் என்பதற்கு மேற்கூறிய மேற்கோள் செய்யுள்களே சிறந்த சான்றுகளாகும். செந்தமிழ் மரபில் வந்த ஞானச் சித்தர்களும் தங்கள் அனுபவங்களை எண்ணற்ற பாடல்களாக இசைத்து தந்துள்ளனர் என்பதும், இங்குநோக்கத்தக்கது. இருக்கை, வளிநிலை அல்லது உயிர்நிலை, தொகைநிலை, பொறைநிலை, நினைவு என்பன போன்ற யோகக்கலைச் சொற்களைத் தூய தமிழில் வழங்கியுள்ளதை நோக்கும் போது நம் சான்றோர்களின் ஆன்மிகஞானமும், அருந்தமிழ்ப் பற்றும் தெளிவாகவிளங்கும்.

திருமந்திரத்தை வழங்கிய திருமூலரும் எண்வகை யோகத்தைப் பற்றிவிளக்கமாகப் பேசுகின்றார்.

'தேடும் இயமம் நியமாதிசென்றுஅகன்று

ஊடும் சமாதியில்உற்றுப் பரசிவன்

பர்டுறச் சீவன் பரமாகப் பற்றறக்

கூடும் உபசாந்தம் யோகாந்தக் கொள்கையே" ஞானயோக முயற்சியில் ஈடுபடுபவர்கள் இயமம் நியமம் முதலிய அஷ்டாங்கயோகத்தில் படிப்படியாக ஆழ்ந்து சென்று எட்டாவதாகிய சமாதிநிலையை அடைந்து இறையனுபவத்தில் நுழைந்தால் ஆன்மாவானது பரம் பொருளாகவே மாறும். பற்றுக்கள் நீங்கியஅந்தநிலையில் கூடும் போது எண் வகை யோகத்தின் பயனாகிய உபசாந்த நிலையுண்டாகும் எனத் திருமூலர் கூறுகின்றார் (Manikkavasagan, 2018). இதே செய்தியை புவனை கலைஞான தீபம் என்னும் யோக நூலும் பின்வரும் பாடலில் எடுத்தியம்புகின்றது.

'விரிக்கும் இயமநியமஆசனத்தின் விதியறிந்து

சரிக்கும் அனிலனைநேரேநிறுத்திச் சமாதிபெற்றே

இருக்கும் பொழுதில் உபசாந்தநிட்கலநேயமெய்திப்

பரிக்கும் தனியின்பயோகாந்தம் எங்கள் பராபரையே"

அஷ்டாங்க யோகத்தின் விதியை நன்கு அறிந்து உள்முகமாகத் திருப்பிய வாசியைச் (காற்று, குண்டலினிக் கனல், ஓம் எனும் பிரணவமந்திரம்) சுழிமுனை நாடி வழியாகத் தலைக்கு மேலேற்றி நிறுத்திச் சமாதிநிலையை அடைய வேண்டும் (Manikkavasagan, 2018). அந்த நிலையில் யோகிக்குஉபசாந்தம் என்னும் இறைஅமைதியில் திளைக்கும் பேறுஉண்டாகும். தான் வேறு, இறைவன் வேறு என்கிற நிலைமாறி இறையின்பத்தில் கலக்கும் நிட்கலநிர் அதிசய இன்பம் பெருகும். இதுவே யோகாந்தம் ஆகும். அனிலன் என்பது மூச்சுக் காற்றைக் குறிக்கும்.

இந்த எண்வகை யோகத்தைப் பயிற்சிசெய்துஅதில் நிறைவுபெற்றால் நாம் பிறவியை வெல்லலாம் என்பதுவள்ளுவர்வாய்மொழி. அதனால் தான் 'ஒழுகின்"என்றசொல்லை இட்டுள்ளார். அவ்வாறுஒழுகினால் 'சார்தரு நோய்"அழிந்துபோகும் என்பதுவள்ளுவர்வாக்கு.

## சார்தரு நோய்

சார்தருநோய் என்பதற்குப் பரிமேலழகர், 'சாரக்கடவனவாய் நின்ற துன்பங்களாவன, பிறப்பு அநாதியாய் வருதலின் உயிரான் அளவின்றி ஈட்டப்பட்டவினைகளின் பயன்களுள் இறந்த உடம்புகளான்

அனுபவித்தனவும், பிறந்த உடம்பான் முகந்துநின்றனவும்ளு ஒழியப் பின்னும் அனுபவிக்கக் கடவனவாய்க் கிடந்தன" -என்றுவிளக்கம் தருகின்றார் (Parimelalhagar, 2016).

அநாதிகாலம் தொட்டுஆன்மாக்கள் பிறவியெடுத்து அளவின்றி வினைகளை அனுபவித்து வருகின்றன. பிறவிகள் தோறும் அவ்வினைகளைப் பகுதி பகுதியாகஅனுபவித்துக் கழித்தும் வருகின்றன. இவ்வாறு முன் பிறவிகளில் கழித்த வினைகளும் எடுத்த இப்பிறவிக்கென முகந்து கொண்ட வினைகளும் போக இனிஎடுக்கப்போகும் பிறவிகளில் நாம் அனுபவிப்பதற்கென எஞ்சி நிற்கும்வினைகளைச் 'சார்ந்தரு நோய்" என வள்ளுவர்குறிக்கின்றார். இதைத்தான் பரிமேலழகரும் 'பின்னும் அனுபவிக்கக்கடவனவாய்க் கிடந்தன" என்று கூறுகின்றார். உடம்பை நோய் வாட்டுதல் போல வினைகள் ஆன்மாவுக்குப் பிறவிகளை வழங்கி வாட்டுவதால் அவற்றை 'நோய்" எனக் கூறும் மரபுஉண்டாயிற்று.

இதன் காரணமாகவே பிறவிப் பிணி, பிறவி நோய் எனச் சொல்லும் வழக்கமும் ஏற்பட்டது. பிறவி நோய் தீர்க்கும் மருத்துவன் இறைவன். அதனால் தான் ஆன்மிகச் சான்றோர்கள் அந்தமருத்துவச் சான்றோனை இறைவன் என்றனர். பிறவிநோயைவளர்க்கும் வினைச் சார்புகள் கெடுவதற்காக இறைவன் வழங்கியமருந்துதான் ஞானயோகம் என்பது, அந்தயோகநெறியில் ஒழுகிய அருளாளர்கள் பற்றறுத்து வீடுபேறு அடைந்திருக்கிறார்கள்.

மணிவாசகப் பெருமான் இறைவனைப் பாடும் போது,

'உம்பர்கட் கரசேஒழிவறநிறைந்த

யோகமேஊற்றையேன் தனக்கு

வம்பெனப் பழுத்தென் குடிமுழுதுஆண்டு

வாழ்வறவாழ்வித்தமருந்தே"

எனப் பாடுகின்றார் (Manikkavasagan, 2018). இத்திருவாசகத்துள் இறைவனை 'ஒழிவு அற நிறைந்தயோகமே" என்றும், 'வாழ்வு அற வாழ்வித்த மருந்தே" என்றும் உருவகம் செய்துபாடுகின்றார். இறைவன் யோகமாகவே விளங்குகின்றவன். உலகியல் வாழ்வை நீக்கி பேரின்ப வாழ்வை வழங்குகின்ற மருந்து அவன். அதனால் தான் தெய்வப் புலவர் திருவள்ளுவரும் 'சார்பாகிய இறைவனை உணர்ந்து கொள்ள வேண்டும். வினைச்சார்பு கெடஒழுக வேண்டும்" என இக்குறளில் வலியுறுத்திக் கூறுகின்றார்.

## அழித்துமற்றுச் சார்தரா

சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகியநான்கும் இறைவனை நோக்கி நம்மை மேலேற்றும் நன்னெறிப் படிகளாகும். இவற்றுள் யோகத்தில் முற்றுப் பெற்றவர்கள் ஞானஒளியைஅடையப் பெறுவார்கள். இந்த ஒளியானது சார்தருநோயை அழித்து மீண்டும் சாராதவாறு செய்து விடுகின்றது. பரிமேலழகர், 'அழித்துமற்றுச் சார்தரா"என்னும் தொடருக்கு 'விளக்கின் முன் இருள் போல் ஞானயோகங்களின் முன்னர்க் கெடுதலான் அழித்துச் சார்தரா" என்றார்" என்று அழகிய விளக்கம் தருகின்றார் (Parimelalhagar, 2016).

பிறப்பை 'அறியாமை"என்றுவள்ளுவர்உருவகம் செய்கின்றார். அந்தஅறியாமைநீங்குவதற்குச் சிறப்புஎன்னும் செம்பொருளைக் காண வேண்டும். இங்குச் செம்பொருள் என்பது இறைவனைக் குறிப்பது. அதற்கு உதவி புரிவது ஞானமாகிய அறிவு. அந்த ஞானமாகிய அறிவு துலங்கஒட்டாமல் மூடி வைத்திருப்பவை கர்மவினைகளே ஆகும். அந்த வினைகளை அழிக்கவல்லவை ஞான யோகமாகும். ஞானயோகத்தின் வாயிலாக இறைச் சார்பை உணர்ந்து கொள்ளலாம். பிறவித் தளையை அறுத்து விட்டு விடுதலையாகி பேரின்ப வாழ்வில் திளைக்கலாம்.

## முடிவுரை

ஈரடி கொண்டகு றட்பாவில் வள்ளுவர் செறிந்த ஞான கருத்துக்களைப் பொதிந்து வைத்திருக்கின்றார் என்பதற்கு இக்குறளே சிறந்த சான்றாகும். ஞானயோகத்தின் வாயிலாக ஆன்மாவுக்கான பயன்பாட்டை எளிமையாக விளக்கியுள்ளார் வள்ளுவர். அகமும் புறமும் சார்ந்த நம்முடைய வாழ்வியல் நெறியில் அகத்துக்கான முக்கியத்துவம் தொடர்ச்சியாக உணர்த்தப்பட்டு வந்திருக்கிறது. அதற்கான பதிவுகளை ஆராய்ந்து பார்க்கும் போது தமிழரின் ஆன்மத் தேடலுக்கான வலிமையை உணர முடியும். நிலையற்ற உடலைக் கொண்டு நிலையான பரம்பொருளை உணர்வதற்கான பக்குவநிலையை அடைவதன் மூலம் பேரின்பவாழ்வின் உன்னதத்தை அனுபவிக்கமுடியும். இதைத்தான் வள்ளுவர்மெய்யுணர்தல் அதிகாரத்தில் எளிமையாகச் சொல்லியிருக்கிறார். திருக்குறள் ஒருநீதி இலக்கியம் என்றவரையறையைத் தாண்டி மெய்ஞானத்துக்கான புரிதலாக அதை நோக்க வேண்டிய அவசியம் உள்ளது. அப்படியான ஆய்வுகள் வரும் காலங்களில் ஏற்படும் போது திருக்குறளின் மாறுபட்டஅவசியம் தமிழ்ச்சூழலில் முன் வைக்கப்படும்.

## References

Manikkavasagan, G., (2018) Thirukkural, Uma Pathippagam, Chennai, India.

Manikkavasagan, G., (2018) Thirumoolar Aruliya Thirumanthiram, Uma Pathippagam, Chennai, India.

Parimelalhagar, (2016) Thirukural, Saradha Pathippagam, Chennai, India.

Sri Chandran, J., (2009) Ilango Adigalin Silappathikaaram, Vardhamanan Pathippagam, Chennai, India.

Sundaramoorthy, E., (1986) Tholkappiyam, New Century Book House, Chennai, India.

Thayumanavar, (2014) Thirukkural, International Institute of Tamil Studies, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License